திருமறைநூல் நாடக வரிசை - 3

# புதிய பூமி



# புதியபூமி

எழுதியவர்
இன்பராஜன்

V. J. Constantine
28/1. St. JAMES WEST STREET
JAFFNA

நாடகப் பிரதியாக்கப் பகுதி
திருமறைக்கலாமன்றம்

அட்டைப்படம்: ரமணி
படங்கள் உள்ளே: சாமி
வடிவமைப்பு: ரஞ்சித்

**CENTRE FOR PERFORMING ARTS**

திருமறைக்கலாமன்றம்

திருமறைநூல் நாடகவரிசை

புதியபூமி

திருமறைநூல் உலகப்பொதுமை வாய்ந்தது! பல் மொழி மக்களும் படித்து இன்புறும் தகமை வாய்ந்தது! அதில் ஆய்வுக்குரியவை ஆயிரமாயிரம் இருப்பினும், ஆழமான, ஆணித்தரமான, சிந்தனைகளைத்தூண்டும் அமுத ஊற்றாகவும் அது விளங்குகிறது.

இத்தகைய தலைசிறந்த இலக்கியத்தை நாடக வரிசை நூல்களாக்கி நற்றமிழ் உலகிற்கு நல்கவேண்டும் என்ற நல்லெண்ணம் நம்முள் பல்லாண்டு துளிர்த்திருந்தது. இளைய வயதினரும், முதியவரும், கற்றவரும், மற்றவரும் நாடக உருவத்தில் திருமறைநூலையும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற அக் கனவு இப்போது நிறைவு பெறத் தொடங்கியுள்ளது.

திருமறை நூல் முழுவதையும் முதலில் இருந்து இறுதிவரை தொடர்வரிசையில் எழுதி வெளியிடும் பணியைத் திருமறைக்கலாமன்றம் பொறுப்பேற்றுள்ளது. இவ் அரும் முயற்சியினை தமிழ்கூறும் நல்லுலகம் தவறாது ஆதரிக்கும் என்ற திடமான நம்பிக்கை நமக்கு உண்டு.

பேராசிரியர்.நீ.மரியசேவியர் அடிகள்

இயக்குனர்.

## காட்சி ஒன்று



*மேடையில் நோவா அசையா நிலையில் நிற்க இரண்டு உரைஞர்கள் மேடையில் தோன்றத் திரை திறக்கப்படலாம்.*

உரைஞன் 1: நோவா! இவன் ஆதாமின் சந்ததியில் ஆண்டவனின் அருள்பெற்ற ஓர் அடியான். இவன் நீதியின் வடிவம். கடந்த ஒரு யுகத்தின் அழிபாடுகளில் இருந்து புதிய ஒரு யுகத்தின் முதல் மனிதனாய், புதிய யுகச்சந்ததியின் கருப்பையாய் இனம் காணப்பட்டவன். இவனிடமிருந்தே இறைவன் ஒரு புதிய யுகத்தை உருவாக்கினார்.

உரைஞன் 2: ஏன் என்று கேளுங்கள். இதுதான் பதில் என்று இடித்துச் சொல்வேன். பூமியின் பரப்பில் கிளைகள் பரப்பி, பல்கிப் பெருகிய மனிதகுலம் கடவுளின் கட்டளைகளை கருத்தில் கொள்ளாமல், கண்போன போக்கிலும் கால்போன போக்கிலும் கருத்தழிந்து கறை நிறைந்த களங்க வாழ்வு வாழத்தொடங்கியது.

உரை.1: நீதி விலைபோனது! நேர்மை தலைசாய்ந்தது! இரக்கம் இருந்த இடம் தெரியாது ஒதுங்கிக் கொண்டது. வான்போல் விரிந்த அக்கிரமங்கள் இதயவறைக்குள் மடித்து சொருகப்பட்டன.

உரை.2: எங்கும் சுயநலம்! எதிலும் அநீதியின் சுவடுகள்! தொட்ட இடமெல்லாம் தொற்று நோய்போல் தொடரும் பாவச் செயல்கள், மனித இதயத்தினுள் குடியிருந்த தெய்வம் குட்டிக்கலைக்கப்பட்டபோது குட்டிப்பசாசு அதனுள் புகுந்தது.

உரை.1: போட்டியும் பொறாண்மையும்

உரை.2: கொலையும், கொள்ளையும்

உரை.1: வஞ்சமும், வசையும்

உரை2: ஆணவச்செருக்கும், ஆடம்பரமும்

உரை1: பொருள் ஆசையும், புகழாசையும்

உரை2: விபச்சாரமும், கேளிக்கையும்

உரை1: சிலைவழிபாடும், பெல்லிசூனியமும்

உரை2: பொய்வாயும், வஞ்சகநாக்கும்

உரை1: சுரண்டலும், சூழ்ச்சியும்

உரை2: பூமியின் மடியைத் தீட்டாக்கின.

உரை1: பெற்றோரைப் பழிக்கும் பிள்ளைகளும்

உரை2: பெரியவரை கனம்பண்ண மறுக்கும் சிறியவரும்

உரை1: தர்மத்தின் தலையை கொய்து போட்டனர்.

உரை2: இரக்கம் கொண்ட இறைவன் வருந்தினார்.

உரை1: அரக்கத்தனத்தை அழிக்கக் கருதினார்.

உரை2: புதிய வானம், புதிய பூமி, புதிய மனிதன் படைக்க முனைந்தார்.

உரை1: புதுயுகத் தலைவன் நோவாவை அழைத்தார்.

உரை2: புதுயுகம் படைக்க பரிந்துரை செய்தார்.

*உரைஞர்கள் இருவரும் மேடையை விட்டுவிலகிச் செல்ல, கடவுள் நோவாவுடன் உரையாடுகிறார். நோவா அசைவுற்றுப் பேசத் தொடங்குகிறார்.*

கடவுள் குரல்: நோவா! நோவா!

நோவா: ஆண்டவரே! இதோ! உமது அடியான்!

கடவுள் குரல்: உண்மைப் பொருளாய், இருப்பவராய் இருக்கும் உனது முன்னோர்களின் இறைவன் நாமே. உனது முன்னோரை வழிநடத்தியவரும் வாழ்வளித்தவரும் நாமே. நாமே உன்னை அழைத்தோம்.

உரை.1: கள்ளத்தராசும், கலப்படமும்

நோவா: அணிகளின் அமலனே! முன்னோர்களின் முதல்வனே, உம்திருமுன் நிற்கும் உமது அடியானாகிய என்னோடு, என்ன பேசப் போகிறீர்? அச்சத்தால் உடல் பதறுகிறதே!

கடவுள்குரல்: அஞ்சாதே! அனைத்தையும் அறிந்தோம். என்படைப்பு அனைத்தையும் அழிக்கக் கருதி உள்ளோம்.

நோவா: ஆண்டவரே! யாரை அழிக்கப் போகின்றீர்?

கடவுள்குரல்: நாம் படைத்த புனித பூமியை, மனிதர்கள் தமது அக்கிரமத்தால் தீயாக்கி விட்டார்கள். ஆன்மாவை அழித்து விட்ட தீயர்களை அழிக்கப்போகிறோம். அநீதி பூமி எங்கும் செழித்திருக்கிறது; அக்கிரமம் வயல்கள் தோறும் வீற்றிருக்கிறது. அனைத்தையும் படைத்து, அனைத்தையும் காத்த நாமே அனைத்தையும் அழிக்கக் கருதினோம்.

நோவா: ஐயோ! இறைவா! உமது சித்தம் நிறைவேறுக. அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

கடவுள்குரல்: நன்கு இசைவான மரங்களாய்த் தேர்ந்தெடுத்து ஒரு பேழையைச் செய். மூன்று தட்டுக்கள் கொண்ட அந்தப் பேழைக்குள் சிறுசிறு அறைகளை அமைத்துக்கொள். அப் பேழையின் உள்ளும் புறமும் தாரைப் பூசு. முந்நூறு முழநீளமும், ஐம்பது முழ அகலமும், முப்பது முழ உயரமும் கொண்டதாக அந்தப் பேழை அமையட்டும். பேழையின் மேற்தட்டுக்கு ஒருமுழம் தாழ்த்தி ஒரு ஜன்னல் அமைத்திடுக. பேழையின் ஒரு பக்கத்தில் கதவு இருக்கட்டும். இதுவே எனது ஆணை

நோவா: ஆண்டவரே! உமது கட்டளையை சிரம்மேல் சுமந்தேன். உம் பெயர் நீடு வாழ்க!

திரை

# காட்சி இரண்டு



*நோவா, மேடையில் பேழை செய்வதற்கான அணிகலன்களோடு நின்று இறைவனை வேண்டுகின்றார். திரை திறக்கிறது.*

நோவா: அன்பின் இறைவா! உமது ஆணையின்படி என்னால் சுமக்க முடியாத இந்தப் பாரத்தை, பாரிய பணியைத் துணிந்து ஏற்றுள்ளேன். துணை நின்று, தோள் தந்து பணிமுடிக்க வேண்டுகின்றேன்......

*வேண்டுதலின் பின் நோவாவின் மனைவி வருகிறாள்.*

நோவா: எமது கடவுளின் கட்டளைப்படி காரியம் நடக்க நாம் கடுமையாய் உழைப்போம். கண்விழித்திருப்போம். பிள்ளைகளைப் பக்குவப்படுத்திக்கொள். இது உனது பொறுப்பு.

மனைவி: நாம் என்றும் இறைவனுக்குக் கீழ்பட்டவர்கள். விலக்கப்பட்ட கனியைத் தின்று வேதனைகளை வலிந்து வாங்கிக்கொண்ட நம்முன்னோர்போல் நாம் இருக்க முடியுமா? இறைவனின் கட்டளையை நிறைவேற்ற பேழைகட்டும் இந்தப்பாரிய வேலையில் நானும் பிள்ளைகளும் உமக்குப் பக்கபலமாக இருப்போம். இதற்காக இறைவனை இறைஞ்சுவோம்....

நோவா: வெளியே சென்று பிள்ளைகளோடு, அறுத்து வைக்கப் பட்டிருக்கும் மரத்துண்டுகளை எடுத்துக்கொண்டுவா.

*மனைவி மேடைக்கு வெளியேபோனபின், நோவா ஒரு சுத்தியலையும் பலகைத்துண்டையும் எடுத்துக்கொண்டு நிமிரும்போது அயலவர்கள் இருவர் வருகிறார்கள்.*

ஒருவன்: நோவா! என்ன காரியம் செய்கிறீர்? நீர் ஏதோ பேழை செய்வதாய் ஊரில் ஒரு வதந்தி. எங்களுடன் எதுவுமே கலந்தாலோசியாமல், நீரும் உமது குடும்பமும் என்னதான் சாதிக்கப்போகிறீர்? இது என்ன பரமஇரகசியமா?

நோவா: ஆண்டவன் கட்டளை. பேழை செய்யும்படி கட்டளை யிட்டுள்ளார்.

மற்றவன்: ஏன் பேழை செய்யச் சொன்னார்?

நோவா: எனக்கு எதுவுமே தெரியாது. அவர் ஆணையிட்டார். நான் அடிபணிகிறேன்.

ஒருவன்: கடவுளின் கட்டளை. சிரிப்புத்தான் வருகிறது. உமக்குப் புத்தி பேதலித்து விட்டது. வாழத்தெரியாத வரட்டு மனிதன். இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழ்க்கைக்கு வரம்பு கட்டியது யார்? எப்படியும் வாழலாம் என்பதே எமது இலக்கணம். இருக்குமட்டும் இன்பங்களை அனுபவிப்பதே எமது இலட்சியம்.

நோவா: கண்ணைத் திறக்கவேண்டிய நேரத்தில் அதை மூடுபவனுக்கும், கண்ணை மூட வேண்டிய நேரத்தில் அதைத் திறப்பவனுக்கும் ஐயோ கேடு. நீங்கள் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் இருக்கிறீர்கள் படைப்புக்கள் அனைத்தும் ஒரு நியதியின்கீழ் இயங்குகிறது. மனித வாழ்வுக்கும் ஒரு விதி இருக்கிறது. உங்கள் இதயங்கள் அக்கிரமங்களால் நிறைந்துள்ளன. நீதியை ஏலம்போட்ட உங்களுக்கு என்னோடு என்ன வழக்கு?

ஒருவன்: நோவா, நீ அதிகப் பிரசங்கம் செய்கிறீர். ஏன் என்று கேட்காத உமக்கு, ஏன் என்று கேட்கத் துணியாத உமக்கு ஞானத்தைப்பற்றி என்ன தெரியும்? ஏன் என்ற கேள்விதானே ஞானத்தின் தொடக்கம்.

நோவா: ஞானம் முக்காலத்தையும் உணர்த்துகிறது. இறைவன்

முக்காலத்தையும் அறிந்தவன். எனவே ஞானம் அவனிடமிருந்தே உதிக்கிறது. கேள்வியில் இருந்து அல்ல. கேள்வியின் நாயகனே இறைவன்தானே. அவர் கட்டளை இடும்போது நான் எப்படிக் கேள்விகள் கேட்பேன்? ஆனால் பூமியில் அநீதியும், அக்கிரமமும் அதிகரித்துவிட்டதாக ஆண்டவர் கோபமுற்றிருக்கிறார்.

ஒருவன்: அப்படி என்றால் எங்களை அழிக்கப்போகிறாரா? (சிரிப்பு) ஹ...ஹ... சொன்னபடி செய்யும் கடவுளின் செல்லப்பிள்ளையே, நாங்கள் போட்ட இடத்தில் பொறுப்பற்றுக் கிடக்கும் போடுதடிகள் அல்ல. என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்று தெரிந்துகொள்ளாத, தெரிந்துகொள்ள முடியாத ஒரு கோழை நீர். இது முட்டாள்தனம்.

மற்றவன்: பிறப்பும் ஒருமுறைதான். இறப்பும் ஒருமுறைதான். இந்த இரண்டுக்கும் நடுவில் நடைபெறும் வாழ்க்கை என்பதும் ஒருமுறைதான். எனவே இருக்குமட்டும் உலகை அனுபவிக்க வேண்டும்.

ஒருவன்: பிறப்புக்கு முன்பும், இறப்புக்குப் பின்பும் என்ன நடக்கிறது என்பது எவருக்குமே தெரியாது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. எனவே இருக்குமட்டும் இன்பங்களை அனுபவிப்போம். இதுதான் எங்கள் இலட்சியம். கடவுள் பற்றிய கரிசனை எமக்கு தேவை இல்லை.

மற்றவன்: இதுதான் எங்கள் கொள்கை. நாங்கள் வருகிறோம். நீரும் உமது கடவுளும்...

### இருவரும் போனபின்பு

நோவா: ஆண்டவரே! வணங்காத் தலையர்களாகிய இவர்கள், வாழ்க்கை ஒழுங்கைப் புறக்கணிக்கிறார்கள். வாழ்க்கை ஒழுக்கத்தை வெறுக்கிறார்கள். உமது வல்லமையை வசை

பாடுகிறார்கள். இவர்கள் நாணித் தலைகுனியச் செய்யும். உமது ஞானத்தை அவர்கள் உணரச் செய்யும்.

*நோவா, வேலையை மீண்டும் தொடங்குகிறார். மேடையின் ஒருபக்கத்தில் பேழை அமைந்திருப்பதாய்க் காட்டலாம். அப்போது இறைவன் பேசுகிறார்.*

கடவுள் குரல்: நோவா! நோவா!

நோவா: ஆண்டவரே! இறைவா! இதோ இருக்கிறேன்!

கடவுள் குரல்: நமது கட்டளையைச் சிரமேற்கொண்ட உன்னை நாம் வாழவைப்போம். அக்கிரமம் மிகுந்த இந்த உலகின் உயிரினங்கள் அனைத்தையும் நாம் அழிக்கப் போகிறோம். வானத்தின் கதவுகளைத் திறக்கச் செய்வோம். கார்மேகங்களை மந்தைக்கூட்டங்களைப்போல் பூமியில் தவழவிடுவோம். வெள்ளம் பூமியின் முகத்தைமூடும்; மலை முகடுகளாயும் மறைக்கும்.

நோவா: ஆண்டவரே, எல்லாம் அழிந்துவிடுமா? மனித இனமே மறைந்துவிடுமா?

கடவுள் குரல்: நோவா! நாம் உன்மேலும், உன் குடும்பத்தின் மேலும் கருணை கூர்ந்தோம். அழிவிலிருந்து உங்களைக் காப்போம். நாம் உன்னோடு ஓர் உடன்படிக்கை செய்வோம். எமது ஆணைப்படி நீ செய்வாயாக.

நோவா: ஆண்டவரே! ஆணையிடும். அடியேன் செய்துமுடிக்கிறேன்.


கடவுள் குரல்: நோவா! நீ செய்து முடிக்கவிருக்கும் இந்தப் பேழைக்குள், தூய்மையான அசுத்தமான, ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகிய விலங்குகளை, ஆண்பெண்ணாய், சோடிசோடியாய் சேர்த்து வைப்பாயாக. அவைகளுக்கும் உனது குடும்பத்துக்கும், உனது புதல்வரின் குடும்பத்துக்குமான

உணவு வகைகளைச் சேகரித்துவை. காலம் வரும். கதவு திறக்கும். எமது வல்லமை சிறக்கும்.

நோவா: ஆண்டவரே! காலங்கடந்தவரே! இப்பாரிய கடமையைச் செய்ய உமது வலுவுள்ள கரத்தை என்மேல் வைத்தருள வேண்டுகின்றேன்.

திரை

## காட்சி மூன்று



நோவா கடவுளை வேண்டியபடி அசையாநிலையில் நிற்கிறார். உரைஞர்கள் வருகிறார்கள்.

உரைஞன் 1: யுகப்பிரளயம்...

உரைஞன் 2: மாபெரும் யுகப்பிரளயம்.

உரைஞன் 1: இந்தப் பிரளயத்தைப் பற்றிப் பேசாத மதங்களே இல்லை.

உரைஞன் 2: சொல்லாத புராணங்களே இல்லை.

உரைஞன் 1: ஆனால்...

உரைஞன் 2: திருமறை நூல் கூறும் இந்த யுகப்பிரளயத்தில் ஒரு சிறப்பு இருக்கிறது.

உரைஞன் 1: அகிலத்தில் அநீதி அரசோச்சும்போது, அதர்மம் தலைதூக்கி நிற்கும்போது படைப்பின் தலைவன் அநீதர்களை அழித்துவிடுகிறார்.

உரைஞன் 2: அதுமட்டுமல்ல, நீதியின் பாதையில் அடிபுதைத்து, துயரங்களைச் சுமந்து, துன்புற்றும் நீதிக்காக வாழும் நல்நெறி மாந்தர்களுக்கு வாழ்க்கையில் உன்னத இடங்கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு ஊன்றுகோலாகவும் இது விளங்குகிறது.

உரைஞன் 1: கடவுளின் கட்டளையை ஏற்று, கடுமையாய் உழைத்து, பேழையைப் படைத்து, விலங்குகளையும், தனது குடும்பத்தவரையும் பேழைக்குள் அனுப்பிவிட்டு, நோவா பேழைக்கு வெளியே வானத்தைப் பார்த்தபடி, வானவனை வேண்டியபடி நிற்கிறார்.

*உரைஞர்கள் இருவரும்போக நோவா கடவுளை வேண்டுதல்.*

நோவா: கணங்களின் தேவனே! உமது கட்டளை பேழையாக உருப்பெற்றுவிட்டது. நீர் கட்டளையிட்டவாறே அனைத்து விலங்குகளும், எனது குடும்பமும், அவைகளுக்கான உணவு வகைகளும் பத்திரப்படுத்தப்பட்டுள்ளன. பேழை செய்து இன்றோடு ஏழு நாட்கள் ஆகின்றன. உமது கரத்தின் வலிமையும், எனது குடும்பத்தின் உழைப்பும் வியர்வையும் இந்தப் பேழையில் இருக்கிறது. ஆனால் உமது குரலைக் காணேன். வானம் கலக்கமின்றி நிர்மலமாகவே இருக்கிறது. உம்மைக் குறித்து, உமது வல்லமையைக் குறித்து, நான் கொண்டுள்ள விசுவாசத்திற்கு எந்தக் களங்கமும் ஏற்படாதிருக்கும்படி உம்மை மன்றாடுகிறேன்.

*அப்பொழுது அயலவர்கள் ஏலை ஏலோம் பாடிக்கொண்டு அங்கே வந்து அவரை எள்ளி நகைக்கிறார்கள். நோவா எதுவுமே பேசாமல் முகத்தைத் திருப்பியபடி மௌனமாக நிற்கிறார்.*

ஒருவன்:
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்
வெள்ளோட்டம் பார்க்கலையோ
பார்க்க வந்தோம் நோவாவே
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

மற்றவன்:
வானங்கறுக்கலையோ
வானவன்தான் பார்க்கலையோ
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

இனனொருவன்: கஷ்டப்பட்டு வேலை செய்து
காத்திருக்கும் நோவாவே
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

ஒருவன்: வாக்களித்த தேவனுக்கு
வல்லமைதான் எங்கே?
ஏலை ஏலோம்,
ஏலை, ஏலை ஏலோம்

மற்றவன்: கொண்டல் குறுக்கவில்லை
கருங்கோலம் போடவில்லை
ஏலை ஏலோம்
ஏலை ஏலை ஏலோம்

இன்னொருவன்: வானம் வெளுத்திருக்கு
வரட்சியுந்தான் பூத்திருக்கு
ஏலை ஏலோம்,
ஏலை, ஏலை ஏலோம்

ஒருவன்: வேர்வை வழியுதடா
வெள்ளம் பெருகுதடா
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

மற்றவன்: பேழை விடுவதற்கு
கட்டி இழுத்திடுவோம்
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

இன்னொருவன்: வாடை அடிக்கவில்லை
வானங்கறுக்கவில்லை
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

ஒருவன்: கடவுளை நம்பியல்லோ
ஏமாந்து போனாய் நோவா
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்


மற்றவன்: வாரும் நீர் எங்களுடன்
வாழுவம் இஷ்டம்போல
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

இன்னொருவன்: ஆண்டவனைக் கையைவிடும்
பேழைக்குத் தீயை வையும்
ஏலை ஏலோம்
ஏலை, ஏலை ஏலோம்

*இவர்கள் எள்ளி நகையாடுவதைக் கேட்ட நோவா, நிலத்தில் முகங்குப்புற விழுந்து, நிலத்தில் அடித்து, வானத்தைப் பார்த்துக்கைகளை நீட்டிக் கதறுகிறார். எல்லோரும் சிரிக்கிறார்கள். அப்போது வானங்கறுத்து, பூமி இருண்டு, மின்னலடித்து, இடியிடித்து மழை கொட்ட ஆரம்பித்தது. அயலவர்கள் அஞ்சி ஓடுகிறார்கள். நோவா இறைவனைத் துதித்தபடி பேழையை நோக்கிப் போகத்திரை மூடலாம். ஒலி ஒளியில் இந்தக் காட்சியை அழகாகக் காட்டலாம்.*

**திரை**

# காட்சி நான்கு



உரைஞன் 1: வாரத்து இறுதியில் மழை கொட்டத் தொடங்கியது. நாற்பது இரவும், நாற்பது பகலும் யுக மழை பொழிந்தது. பூமியின் ஊற்றுக் கண்கள் திறந்தன. ஆறுகள் பெருகின. நீரோடைகள் பொங்கி எழுந்தன. நதியும் கடலும் சங்கமித்தன. வெள்ளம் உயர உயரப் பேழையும் மிதந்தது.

உரைஞன் 2: பூமியில் வாழ்ந்த ஊர்வன, பறப்பன, நடப்பன எல்லாம் அழிந்தன, மனிதர்கள் வீழ்ந்தனர். உடல்கள் தெப்பங்களாக மிதந்தன. விலங்குளையும், நோவாவின் குடும்பத்தையும் சுமந்தபடி பேழை மட்டும் பேரழிவிலும் பொலிவுற்று மிதந்துகொண்டு இருந்தது. பூமியின் பரப்பில் பேழையைத் தவிர மற்றும் அனைத்தும், மலை முகடுகளும் நீருள் மூழ்கின.

உரைஞன் 1: தமது அடியான் நோவாவோடு செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்த இறைவன், மழையைத் தடுத்தார். வெப்பக் காற்றை வேகமாக வீசச் செய்தார். சிறிதுசிறிதாக வெள்ளம் வற்றத் தொடங்கியது. ஏழாம் மாதத்தின் இருபத்தேழாம் நாளன்று பேழை ஆர்மேனிய நாட்டின் மலையின் மீது தங்கியது.

*இப்போது நடுத்திரை விலக நோவாவின் பேழையைக் காட்டலாம். இந்தக் காட்சியின்போது, ஒலி, ஒளி, இசையால் அந்தச் சூழலைப் பிரதிபலிக்கலாம். திரைவிலக உரைஞர்களும் தற்காலிகமாக விலகவேண்டும். பெட்டகத்தில் இருந்தவாறே நோவா பேசுகிறார்.*

நோவா: மழை நின்றுவிட்டது. வெள்ளம் வற்றத் தொடங்கிவிட்டது. இறைவா! உமது அடியானோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நீர் நினைவுகூரும். இப்போது நான் என்ன செய்வது...(சிந்தித்தபடி) ஆம்..வெள்ளம் எங்கேயாவது வற்றிவிட்டதா என்று அறிய ஒரு காக்கையை வெளியில் விட்டுப் பார்ப்போம்.

(உரைஞன் 1 மேடைக்கு வருதல்)

உரைஞன்1: காகம் பறக்கத் தொடங்கியது. வெள்ளம் வற்று மட்டும் காகம் அங்குமிங்கும் பறந்துகொண்டே இருந்தது. திருப்பி நோவாவிடம் வரவே இல்லை.

(உரைஞன் போக நோவா பேசுகிறார்)

நோவா: காக்கையைக் காணவில்லையே. அப்படியாயின் ஒரு புறாவை வெளியே அனுப்பிப் பார்ப்போம்.

உரைஞன்2: பூமியின் மடியை வெள்ளம் இன்னமும் மூடியுள்ளதால், கால்வைத்து வீற்றிருக்க இடமின்றி, புறா பேழைக்கத் திரும்பியது. இதன்பின்பு ஏழுநாட்கள் கழிந்தன.

(உரைஞன் மறைதல்)

நோவா: புறா திரும்பி வந்து ஏழுநாளாகிவிட்டது. இன்னும் ஒரு புறாவை அனுப்பி வெள்ளம் வற்றிவிட்டதா என்று அறிவோம்.


(புறாவை விடுதல்)
(உரைஞன் வருதல்)

உரைஞன்1: புறா வெள்ளக்காட்டின்மேல் பறந்து சென்றது. மாலை நேரமானது. (ஒளியால் மாலையைக் காட்டல்) புறா பசுமை பிழியும் ஒரு ஒலிவ மரக்கிளையைச் சொண்டில் சுமந்தபடி வந்து சேர்ந்தது. இதனால் நோவா வெள்ளம் வற்றிவிட்டது என்பதை அறிந்துகொண்டார். பின்பு இன்னும் ஏழு நாட்களின்பின் நோவா இன்னும் ஒரு புறாவைப் பறக்கவிட்டார். அது அவரிடம் திரும்பி வரவே இல்லை.

(உரைஞன் மறைதல்)
(நோவா பேசுதல்)

நோவா: ஆண்டவரே! உமது கரத்தின் வலிமை எவ்வளவு பெரியது! உமது சினம் எவ்வளவு கடுமையானது. நீதிமான்கள்மேல் உமது கருணையை நிலை நாட்டினீர். உறவும் சுற்றமும் இந்தப் பிரளயத்தில் அழிந்து போனதால் நான் தனிமையானேன். எனது நெஞ்சு நோகிறது. வலிப்பு எடுக்கிறது. இருந்தும் என்றும் எனது அருகில் உமது அன்பு நிழலிடுவதை உணர்ந்து அமைதி அ்டைகிறேன். கற்களில் இருந்து அப்பங்களைப் படைக்கும் ஆற்றல் உள்ளவரே, எனது குலக்கொழுந்துகளைக் காப்பாற்றினீர். உமது பெயர் என்றும் மாட்சி பெறுவதாக.

திரை



# காட்சி ஐந்து



*நோவா தன்னுடன் சேர்ந்தவர்களுடன் கடவுளுக்குப் பலிப்பீடம் கட்டித் தகனப் பலியைச் செலுத்தும் காட்சி. அப்போது கடவுள் நோவாவுடன் பேசுகிறார்.*

கடவுள் குரல்: நோவா! நீயும் உனது மனைவியும், உனது புதல்வர்களின் மனைவியரும் எனது ஆசீரைப் பெறுகிறீர்கள். ஊர்வன, பறப்பன, நடப்பனவும் அதில் கலந்துகொள்ளட்டும். பல்கிப் பெருகுவீர்களாக...

நோவா: வல்லபதேவனே! உமது வார்த்தையின்படியே ஆகக்கடவது.

கடவுள் குரல்: நோவா!

நோவா: ஆண்டவரே! இதோ! உமது அடியவன்.

கடவுள் குரல்: நாம் உனது தகனப் பலியை ஏற்றுக்கொண்டோம். உன்மேல் கருணை கொண்டோம். பூமியையும் அதிலுள்ள உயிருள்ள, உயிர்அற்ற அனைத்தையும், ஆளவும், அனுபவிக்கவும் அதிகாரம் தந்தோம். ஆனால் ஒன்று மட்டும் நீ செய்யலாகாது.

நோவா: ஆண்டவரே! இது தக்கது, இது தகாதென அறிந்தவரே, அறிவின் ஒளியே! அவற்றை எனக்கு வெளிப்படுத்தியருளும்.

கடவுள் குரல்: எல்லா உணவுவகைகளையும் நீங்கள் உண்ணலாம். ஆனால் இறைச்சியை அதன் இரத்தத்தோடு உண்ணலாகாது. உங்கள் உயிர் இரத்தத்துக்காக, எல்லா உயிர்களிடத்தும், மனிதர்களிடத்தும் பழிவாங்குவோம். மனிதனுடைய உயிருக்காக அவன் சகோதரனிடம் பழிவாங்குவோம். மனித இரத்தத்தைச் சிந்துபவன் இரத்தமும் சிந்தப்படும். ஏனெனில் மனிதன் நமது சாயலாகப் படைக்கப்பட்டவன்.

நோவா: ஆண்டவரே! உமது ஆணைப்படியே ஆகட்டும். ஆண்டவரே! இந்த யுகப்பிரளயம், மனித பாவங்களுக்குத் தண்டனையாயின்,

இனிமேலும் இப்பேரழிவு பூமுகத்தை மூடிக்கொள்ளுமா?

கடவுள்குரல்: நோவா! உனது பரம்பரையைப் பாராள வைத்தோம். நாம் உங்களோடு ஒரு நித்திய உடன்படிக்கை செய்தோம். இனி எந்த உயிரினமும் பிரளயத்தால் அழிவுறாது. இதுவே எமது நித்திய உடன்படிக்கை.

நோவா: ஆண்டவரே! உமது நித்திய உடன்படிக்கையின் அடையாளம் ஒன்றை அடியேனுக்குக் காண்பித்தருளும்.

கடவுள் குரல்: ஆண்டவராகிய நமக்கும், உலகத்தில் உள்ள எல்லா உயிரினங்களுக்குமிடையே நாம் செய்துகொள்ளும் நித்திய உடன்படிக்கையின் அடையாளம் இதுவே. நாம் வானமேகங்களின்மேல் வண்ண நிறங்களில் வனப்புறு வானவில் ஒன்றைத் தோற்றுவிப்போம். இந்த வானவில் தோன்றும்போதெல்லாம் நீங்கள் எமது உடன்படிக்கையை நினைவுகூருங்கள். இந்த உடன்படிக்கையை நாம் என்றென்றும் நினைவுகூருவோம்.

நோவா: ஆண்டவரே! மனிதர்களின் அக்கிரமங்களால் கறையுற்ற ஒரு யுகத்தைப் பிரளயத்தால் புனிதப்படுத்தினீர். ஒரு புதுயுகத்தின் முதல் மனிதனாக என்னையும் என் குலத்தையும் புடமிட்டு வைத்தீர். உமது தூய்மை என்றென்றும் போற்றப்படுவதாக

முற்றும்

---

Our Gratitude to
AUSTRIA'S DREIKONIGSAKTION
DER KATH. JUNGSCHAR

வெளியீடு

***CENTRE FOR PERFORMING ARTS***

**திருமறைக் கலாமன்றம்**

PRINTED BY : SHARP GRAPHICS (PVT) LTD. T:PHONE : 421565